வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க.எண்.5270/இ2/2019 நாள் .09.2019

பொருள் – தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி –01.01.2017 அன்றைய நிலவரப்படி அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பயிற்றுநர்(தொழிற்கல்வி)ஆசிரியர் பதவிக்கு பதவி உயர்வு மூலம் நியமனம் செய்திட தகுதி வாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள் பட்டியல் தயாரித்து கோரியது – சுற்றறிக்கை திரும்ப பெறுதல் – சார்பு.

பார்வை – தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(தொழிற்கல்வி) செயல்முறைகள் ,சென்னை–06 ந.க.எண். 75050/வி1/இ2/2019 நாள்.31.05.2019

---

பார்வையில் காணும் இயக்குநரின் செயல்முறைப்படி அரசாணை(நிலை)122 ப.க.து(பக2)2 துறை நாள்.02.06.2017ன் மூலம் தோற்றுவிக்கப்பட்ட கணினி பயிற்றுநர்களுக்கு அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை கணினி பயிற்றுநராக பதவிஉயர்வு அளித்திட தகுதிவாய்ந்தவர்கள் பட்டியல் கோரி சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

NCTE 2004 வழிகாட்டுதலின்படி 11–ம் வகுப்புமற்றும் 12–ம் வகுப்புபாடம் போதிக்கும் ஆசிரியர்கள் முதுகலைபட்டம் மற்றும் B.Ed., தகுதியுடன் நியமிக்கப்பட வேண்டும் என்றமையால் இப்பொருள் குறித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஏனவே பார்வையில் குறித்துள்ள சுற்றறிக்கை இதன் மூலம் திரும்பபெறப்படுகிறது என சார்ந்த அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

17.09.2019

பெறுநர்

சார்ந்த அரசு மற்றும் நகராட்சி உயர்நிலை
/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   வேலூர் / அரக்கோணம் / இராணிப்பேட்டை /
   திருப்பத்தூர் / வாணியம்பாடி
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(தொழிற்கல்வி) அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.